புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை
***

எண்: 04/TD/DTC/PA/2015 புதுச்சேரி, தேதி: 11.09.2015

## புதிய போக்குவரத்து கிளை அலுவலகங்களில் புதிய பதிவுஎண் வரிசைகளில் வாகனப் பதிவு தொடக்கம்

## போக்குவரத்துத் துறை அறிவிப்பு

உழவர்கரை தாலுகாவினைச் சேர்ந்த பொது மக்களின் வாகனம் தொடர்பான சேவைகளுக்காக சாரத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் தொடங்கப்பட்டுள்ளது. அதுபோல் வில்லியனூர் தாலுகாவினைச் சேர்ந்த பொதுமக்களின் வாகனம் தொடர்பான சேவைகளுக்காக திருபுவனையில் வட்டாரப் போக்குவரத்து கிளை அலுவலகம் தொடங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களால் கடந்த 27.08.2015 மற்றும் 08.07.2015 தேதிகளில் தொடங்கப்பட்ட இந்த இரு அலுவலகங்களில் வாகனம் ஓட்டுவதற்கான பழகுனர் உரிமம் மற்றும் வாகன தகுதிச் சான்றிதழ் வழங்குதல் போன்ற ஒரு சில சேவைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. விரைவில் இந்த அலுவலகங்களில் புதிய வாகனங்களை பதிவு செய்வதற்குறிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

உழவர்கரை தாலுகாவில் பதியப்படும் வாகனங்களுக்கு PY-05 என்று தொடங்கி வாகனப் பதிவு நடைபெறும். வில்லியனூர் தாலுகாவில் பதியப்படும் வாகனங்களுக்கு PY-05 V என்று தொடங்கி வாகனப் பதிவு நடைபெறும். புதிய வாகனங்களுக்கான பதிவு எண்களை பொது மக்கள் தேர்ந்தெடுத்துக்கொள்வதற்கு வசதியாக ஒவ்வொரு புதிய பதிவு எண் வரிசை தொடங்கப்படும் போதும் பதிவு எண்கள் மின் ஏல முறையில் ஏலம் விடப்படும். அதே நடைமுறையில் PY-05 0001 தொடங்கி PY-05 9999 வரை உள்ள பதிவு எண்கள் உழவர்கரை தாலுகா வட்டாரப் போக்குவரத்து அலுவலக்தில் பதிவு செய்யப்படும் வாகனங்களுக்காக மின் ஏலம் விடப்படுகிறது. PY-05-V-0001 தொடங்கி PY-05-V-9999 வரை உள்ள பதிவு எண்கள் வில்லியனூர் தாலுகா வட்டாரப் போக்குவரத்து கிளை அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் வாகனங்களுக்காக மின் ஏலம் விடப்படுகிறது.

புதிய வாகனப் பதிவு எண்கள் பெறுவதற்கான மின் ஏலம் வரும் 14.09.2015 அன்று தொடங்கி 25.09.2015 வரை நடைபெறுகிறது. புதிய பதிவு எண்களை பெற விரும்புவோர் தமது பகுதிக்கான வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் வட்டாரப் போக்குவரத்து கிளை அலுவலகத்தை அணுகி பதிவுக்கட்டணமாக ரூ.250/- செலுத்தி மின் ஏல விதி முறைகளின்படி மின் ஏலத்தில் கலந்து கொண்டு தாம் விரும்பும் பதிவு எண் பெற வாய்ப்புள்ளது. போக்குவரத்துத் துறை இணைய தளம் www.transport.puducherry.gov.in மற்றும் www.auctionindia.com ல் புதிய பதிவு எண் ஏலம் தொடர்பான விபரங்களை அறியலாம்.

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்